# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.261/2023.
Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முத்துவேல்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன மகராஜா என் அக்கா கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் அக்கா கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்தபோது தென்பாகம் காவல்நிலையத்தில் ஒரு தாளில் போலீசார் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ 1**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 20.01.2023 அன்று மாலை 4.10 மணியளவில் மேற்படி மகாராஜாவைப் பார்க்க கார்த்திக் என்பவருடன் மையவாடி CSI ஓய்வு

கூடத்தின் அருகே மேற்படி மகாராஜன் அமர்ந்திருந்தபோது எதிரி அங்கு சவுக்கு கம்புடன் வந்ததாகவும், நீ செய்வினை வைத்து என் குடும்பத்தை வாழவே முடியாமல் செய்துவிட்டாய் என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டையால் மாறி மாறி மகாராஜாவை ஓங்கி அடித்ததாகவும், மேற்படி மகாராஜா தலை, முகம் முழுவதும் ரத்தக்காயம் ஏற்பட்டு கீழே விழுந்து இறந்துவிட்டதாகவும், அதுகுறித்து மேற்படி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்ததாகவும், இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக ஏற்கனவே ஆஜர் எதிரி மேற்படி மகாராஜாவை சக்கிடி, நொண்டி என்று கேலி செய்ததாக சொல்லப்படும் முன்விரோதத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி மேற்படி மகாராஜாவை கொன்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:35:11 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.261/2023.
Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கார்த்தி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1–ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 20.01.2023 அன்று மாலை 4.10 மணியளவில் மேற்படி மகாராஜாவைப் பார்க்க அ.சா.1 உடன் சென்றபோது மையவாடி CSI ஓய்வு கூடத்தின் அருகே மேற்படி மகாராஜன் அமர்ந்திருந்தபோது எதிரி அங்கு சவுக்கு கம்புடன் வந்ததாகவும், நீ செய்வினை வைத்து என் குடும்பத்தை வாழவே முடியாமல் செய்துவிட்டாய் என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டையால் மாறி மாறி மகாராஜாவை ஓங்கி அடித்ததாகவும், மேற்படி மகாராஜா தலை, முகம் முழுவதும் ரத்தக்காயம் ஏற்பட்டு கீழே விழுந்து இறந்துவிட்டதாகவும், அதுகுறித்து மேற்படி

காவல்நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்ததாகவும், இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக ஏற்கனவே ஆஜர் எதிரி மேற்படி மகாராஜாவை சக்கிடி, நொண்டி என்று கேலி செய்ததாக சொல்லப்படும் முன்விரோதத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி மேற்படி மகாராஜாவை கொன்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:35:20 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.